DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **ஆண்டிச்சி** |
| Husband's Name | : | **அழகன்** |
| Village | : | **விஜயபுரம்** |
| Taluk | : | **சிங்கம்புணரி** |
| Calling | : | **விவசாயம்** |
| Age | : | **60/2025** |

**(வழக்கின் 2-ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை.1ம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது விஜயபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா 1 முத்துலெட்சுமி என் மகள், அ.சா 2 துரைராஜ் என் மகன். அ.சா 3 என் பேரன், அ.சா 4 தேவி என் பேத்தி. வழக்கின் எதிரிகள் இருவரும் என் மருமகனின் தம்பிகள் ஆவார்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு புல்லாம்பட்டியில் உள்ள என் மகள் முத்துலெட்சுமியின் வீட்டிற்கு நான் வேலைக்கு சென்றிருந்தேன். அன்றையதினம் மதியம் 3.00 மணியளவில் நான் என் மகள் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் என் மகள் வீட்டிற்கு வந்து என் மருமகனை மாதங்கருப்பர் கோவிலுக்கு அருகில்

வெட்டிப்போட்டதாகச் சொன்னார்கள். அப்போது நானும், என் பேத்தி தேவி என்பவரும் என் மகள் வீட்டில் இருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும் என்னையும், என் பேத்தியையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். அப்போது என் மகள் முத்துலெட்சுமி அங்கு வந்தார். அதன் பிறகு எதிரி கருப்பையா என் மகளை பைப்பால் அவரது தோள்பட்டையில் அடித்தார். எதிரி முருகேசன் கம்பால் என் மகளின் தொடையில் அடித்தார். அதன் பிறகு நானும் என் பேத்தியும் காயம்பட்ட என் மகளை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம். அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு நானும், என் பேரன் முருகன் ஆகியோரும் என் மகளை சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் தற்போது என் முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகளைத் தான் போலிசார் விசாரணையில் சொன்னேன். என் மருமகன் எப்படி வெட்டப்பட்டார் அவருக்கு எப்படி காயம்பட்டது என்பது எனக்கு நேரடியாகத் தெரியாது. இன்று வரையிலும் குடும்ப சொத்து பிரிபடாமல் உள்ளது என்றால் சரிதான். அடிக்கடி சண்டை வருவதால் எதிரிகள் இருவரும் வெளியூருக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். எதிரி முருகேசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தக்காயம் இருந்தது என்றால் அவர்களாகவே தலையில் அடித்துக்கொண்டார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் என் மருமகன் கிணற்றில் தவறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானும் என் மகளும் தான் முருகேசனை அடித்து காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக

வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் என் மகள் பொய்யாக புகார் கொடுத்ததற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Chief Judicial Magistrate,

Sivagangai.